கடவுளின் தற்கொலைக் குறிப்பு
---------------------------------------------------------
கடவுளாகிய என்னை
முழுக்க முழுக்க நம்பியிருக்கும் மனிதனே
என் தற்கொலையை நீ மன்னித்தே தீர வேண்டும்.
இதற்கு முன் நான்
பல தற்கொலைக் குறிப்புகளை
எழுதி எழுதி கிழித்துப் போட்டு விட்டேன்.
இதுதான் கடைசி.
எனக்குத் தெரியும்
என்னை உருவாக்கி அலங்கரிப்பதற்காக
உன் கையிலிருக்கும் அத்தனை வண்ணங்களையும்
நீ செலவழித்து விட்டாய் என்பது.
எனக்குள்ளிருந்து தொடர்ந்து கேட்கும் குரல் ஒன்று
என்னைச் சதா குற்றவாளி கூண்டில் நிறுத்தி
விசாரணை செய்து கொண்டே இருக்கிறது.
நான் தினந்தோறும் மனச்சோர்வில் விழுகிறேன்
ஒரு தூக்கு தண்டனைக் கைதியைப் போல
என் மரணத்தை எதிர்பார்த்து
தினந்தோறும் காத்திருப்பதின் வலி
உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.
என்னை முழுதாக நம்பும்
உனது சரீர உபாதைகளை
நான் வாங்கிக் கொண்டு
உன்னை நிம்மதியில் வாழ வைக்க முடியவில்லை
என்பதை நினைக்கும்போது
என் முதுகுத் தண்டு சில்லிட்டுப் போகிறது.
நமக்குள் கடுமையான உறவுச் சிக்கல் வந்து விட்டது.
சாதி, மதம் எனும் சாராயங்களைத்
தினம் குடித்து விட்டு வந்து நீ செய்யும் கொடூரங்களை
என்னால் இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.
நான் இனியும் உயிரோடு இருந்தால்
உனது வாழ்க்கைப் பாழாகிவிடும்.
என் கழுத்தையும் மணிக்கட்டு ரத்த நாளங்களையும்,
கத்தியால் வெட்டிக் கொண்டு விட்டேன்.

என் ரத்தத்தால்
உன்னை நீ சுத்தீகரித்துக் கொள்.
இனி என் பெயரால் ரத்த ஆறுகள் ஓடாது.
இனி என் பெயரால்
ஒரு மனிதன் இன்னொரு மனிதனைத்
தொடமாட்டேன் என்று சொல்லப் போவதில்லை.
இப்போது கடவுள் இல்லாத உலகில்
உன்னால் ஒற்றுமையாக வாழ முடியும்.
நான் போகிறேன்.
எனக்கு இதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.
மனிதனே. என்னை மன்னித்து விடு.
நான் செத்த பிறகு
பிரேதபரிசோதனை என்ற பெயரில்
என் சாவுக்கான பொய்க் காரணங்களை மட்டும்
சொல்லிக் கொண்டிருக்காதே.
24 ஜனவரி 2021 -பறம்பு இலக்கிய வட்டம்

